பக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 21 திங்கட்கிழமை (05-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 170

# கிளிநொச்சிக்கு முன்னேற முயலும் படையினருடன் புலிகள் கடுஞ்சமர்

## "உண்மை வெற்றி" நடவடிக்கை நேற்றுக் காலை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒகஸ்ட் 5

ஆனையிறவில் இருந்து " உண்மை வெற்றி " இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து பரந்தன் வரை முன்னேறிய ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகள் அங்கு ஒரு வாரகாலம் தமது நிலைகளைப் பலப்படுத்திய பின்னர், கிளிநொச்சி நோக்கிய தமது நகர்வை நேற்றுக் காலை ஆரம்பித்தன.

நேற்று சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் முன்னேறிய நிலையில் புலிகளுக்கும் அரசுத் துருப்புகளுக்கும் இடையில் கடுஞ் சமர் வெடித்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தகவல் வெளியிட்டது.

புலிகளின் எதிர்ப்பு பலமாக இருந்த போதிலும் அரசுத் துருப்புகள் அவற்றை முறியடித்து முன்னேறுவதில் மும்முரமாக இருந்தனர் என்றும நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

ஆர். பி. ஜிக்கள், மோட்டார் குண்டுகள், சிறுரக ஆயுதங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தித் துருப்புகள் மீது புலிகள் தாக்குதல் நடத்துவதாகவும் அறிவிக்கப்பட்டது.

''உண்மை வெற்றி'' படை நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் நேற்றுக் காலை ஆரம்பமானது குறித்து பல்வேறு அறிவிப்புகளும் வெளியான போதிலும் —

நேற்றைய சண்டையில் இரு தரப்பிலும் ஏற்பட்ட ஆட்சேதம் பற்றிய தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

நேற்றைய படை நகர்வின் பின்னர் கிளிநொச்சி நகரிலிருந்து ஒருசில கிலோ மீற்றர் தூரத்தில் அரச துருப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

கிளிநொச்சி நகரப் பகுதி மக்கள் நடமாட்டமின்றி '' ஆவி உலகம் ''போல் காட்சியளிப்பதாக மற்றொரு செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. (உ-3-5-10)

## விமான, ஹெலி, பீரங்கி, கவச வாகன தாக்குதல்களுடன் படை நகர்வு

கொழும்பு. ஒக. 5

கிளிநொச்சிப் பகுதியை நோக்கி முன்னேற முயலும் ஆயிரக்கணக்கான அரசுத் துருப்புகளுக்கு விமானப்படையினரும், கவசவாகனப் படையினரும் தொடர்ந்து உதவி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை தெற்கு நோக்கிப் படைநகர்வு ஆரம்பமாவதற்கு முன்னரே அபபிரதேசத்தில் இருக்கக்கூடிய புலிகளின் நிலைகள் மீது விமானப்படை குண்டு மாரி பொழிந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

நகரும் படையினருக்கு உதவியாக ஆட்லறிகள், டாங்கிகள், ஹெலிகள், விமானங்கள் போன்றவை விடாது தாக்குதல் நடத்தி வருகின்றன.

போர் விமானங்கள் கிளிநொச்சி நகர் மீது குண்டு பொழிவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

[உ-3-5-10]

## கிளிநொச்சியுடன் நடவடிக்கை நிற்காதாம்!

லண்டன், ஒக. 5

பரந்தனில் இருந்து இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருக்கும் ஸ்ரீ லங்காத் துருப்புகளின் இலக்கு கிளிநொச்சியைப் பிடிப்பதுடன் முடிந்துவிடாது; மேலும் மிகுதியுள்ள வன்னிக் காட்டுப் பகுதியையும் அவர்கள் இலக்கு வைக்கக்கூடும்.

அரச இராணுவத்தின் அதிகாரிகள் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக பி.பி.ஸி. சர்வதேச சேவையின் ஆங்கில ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரர்ணுவ நடவடிக்கையின் இறுதி நோக்கம் என்னவென்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை என இராணுவ ஆய்வாளர்கள்

(6ஆம்பக்கம் பார்க்க)

## கொழும்பை நடுநடுங்க வைத்த பயங்கரச் சத்தம்!

கொழும்பு, ஒக. 5

கொழும்பில் நேற்று விடிகாலை வேளையில் கேட்ட இரண்டு பயங்கரச் சத்தங்கள் மக்களைப் பெரும் பதற்றப்பட வைத்தன.

பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஏதேனும் நடந்து விட்டதோ என்று எண்ணி மக்கள் கிலி கொண்டு நடுநடுங்கினர்.

என்ன நடந்தது, ஏது நடந்தது என்று தெரியாது கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வாழும் மக்கள் சிலமணிநேரம் அதிர்ச்சியும் திகிலும் அடைந்தனர்.

''கிபிர்'' யுத்த விமானம் புறப்பட்ட சத்தமே அது என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது. இதனை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா ஊர்ஜிதம் செய்தார்.

இச் சத்தம் குறித்துப் பதற்றப்பட வேண்டாம் என்றும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

கிளிநொச்சி மீதான தாக்குதல் நேற்றுக் காலை ஆரம்பமான போது, தரைப் படையி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் வன்னிக்கு உணவுப் பொருள்கள்

கொழும்பு, ஒக 5

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளுக்கான உணவு மற்றும் பொருள்கள் விநியோகம் இன்று ஆரம்பமாகும் என வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்தார்.

நேற்று மாலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

வவுனியாவிலிருந்து வரும் லொறிகள் சாந்தசோலையில் வைத்து பொருள்களை இறக்கி, மற்றைய லொறிக்கு மாற்றி உடனடியாக அன்றைய தினமே அவற்றைத் திருப்பி அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஊடாக மடுவுக்குப் பொருள்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் மா, அரிசி, சீனி, பருப்பு ஆகியவற்றுக்கே முன்னுரிமை அளித்து அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கில் ஏற்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# எங்கே போவது என்று தெரியாமல் வீதிகளில் அலைந்து திரியும் மக்கள்

## குடிதண்ணீர், உணவுத் தட்டுப்பாடு மோசமடையும் நிலை

கொழும்பு, ஒக. 5

கடந்த மாதம் 26ஆம் திகதி ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கை ஆரம்பமான பின்னர்—

கிளிநொச்சியிலிருந்து அந்த மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் இடம்பெயரும் மக்கள் தொடர்ந்து நகர்ந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

அவர்களை மூறிகண்டி. மாங்குளம் பகுதிகளில் வீதியோரங்களில் காணமுடிகிறது. மிகப் பலர் வீதியோரங்களில் மரங்களுக்குக் கீழே கூடி இருக்கின்றனர்.

தாம் எங்கே போய்த் தங்குவது என்பதனைத் தீர்மானிக்க முடியாத நிலையில் மக்கள் அங்கும் இங்குமாக அலைந்து திரிகிறார்கள்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இ. தர்மகுலசிங்கம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு நேற்று வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவரது பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயரும் மக்கள் தொடர்ந்தும் நகர்ந்து கொண்டிருப்பதால் அவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியவில்லை. அவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்கு வந்துள்ளார்கள் என்பதனைக் கூறுவதும் கஷ்டமாக உள்ளது

கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்தவர்களில் சுமார் 30,000 மக்கள் 31 ஆம் திகதி வரை கிராம சேவையாளரிடம் பதிவு செய்திருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மூன்று மாத காலத்தில்

# வலிகாமம் பகுதியில் 28பேர் மிதி வெடிகளில் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஒக. 5

வலிகாமம் பகுதியில் மக்கள் மீளக்குடியேறிய திலிருந்து அங்குள்ள மிதிவெடிகள், அமுக்க வெடிகளினால் பாதிப்படைந்து, அங்கவீனர்களாகியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. யாழ். போதனா வைத்திய சாலைப் பதிவேடுகளில் இருந்து இத் தகவல் தெரிய வருகின்றது.

மக்கள் மீளக்குடியேறிய நாளில் இருந்து கடந்த மாதம் 31ஆம் திகதி வரை சுமார் மூன்றுமாத காலத்தில் மிதி வெடிகளில் மாத்திரம் சுமார் 28பேர் சிக்குண்டு பாதிப்படைந்துள்ளனர். இதில் 25 பேர் கால், கைகளை இழந்து அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். மூவர் காயங்களுடன் தப்பித்துள்ளனர். ஒருவர் இரு கால்களையுமே இழந்துள்ளார்.

மேலும் இத்தகைய சம்பவங்களினால் பல கால் நடைகளும் உயிரிழந்துள்ளன. மற்றும் பல அவயவங்களை இழந்த நிலையிலும் உள்ளன. (உ-15)

# கண்டியில் ஐ.தே.க. மேதினப் பேரணி நடத்த விடாமல் தடுத்தது தவறு!

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஒக 5

1995 இல் ஐக்கிய தேசியக் கட்சி தனது மேதினப் பேரணியையும், கூட்டத்தையும் கண்டியில் நடத்த விடாமல் அப்போதைய பொலீஸ்மா அதிபர் பிராங் டி சில்வா தடை உத்தரவு விடுத்தது தவறானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

இந்த உத்தரவின் மூலம் ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் மற்றும் மூவரின் அடிப்படை உரிமைகளை பொலீஸ்மா அதிபர் மீறியுள்ளார் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதியரசர்கள் தெகிரத்ன, வடுகொடப்பிட்டிய, ஆனந்த குமாரசுவாமி ஆகியோர் இந்தத் தீர்ப்பை சில தினங்களுக்கு முன்னர் வழங்கினர்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்த ஐ. தே. க. பொதுச் செயலாளர் மற்றும் மூவருக்கும் செலவுத் தொகையாக தலா ஐயாயிரம் ரூபா அரசு வழங்க வேண்டும் என்றும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

ஐ. தே. க. வின் பொதுச் செயலாளருடன் ஐ. தே. க. சார்பான மூன்று தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

பொலீஸ்மா அதிபர் பிராங் டி சில்வா, பாதுகாப்புப் பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தை, கண்டி பிரதி பொலிஸ்மா அதிபர் ஏ. ஏ. சமரசிங்க ஆகியோர் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

கண்டியில் ஐ. தே. க வின் மேதினப் பேரணி மற்றும் கூட்டங்களை நடத்த விடாமல் தடுத்தது தவறு என்று தமது தீர்ப்பில் குறிப்பிட்ட நீதியரசர்கள் –

இரண்டாவது எதிர் மனுதாரரான அனுருத்த ரத்வத்தை மற்றும மூன்றாவது எதிர் மனுதாரரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. ஏ. சமரசிங்க ஆகியோருக்கு எதிரான வழக்கை மனுதாரர் தரப்பு சட்டத்தரணி வலியுறுத்தாததாலும், மேதினப் பேரணியைத் தடை செய்ததில் அவர்கள் இருவருக்கும் நேரடியாகத் தொடர்பு இருந்தது என்று விரிவான முறையில் நிரூபிக்கப்படாததாலும் அவர்கள் இருவருக்கும் எதிராகத் தவறு எதுவும் காணப்படவில்லை என்றும் தெரிவித்தனர். (உ)

# பட்டலந்த வதை முகாம் நடத்திய எஸ். எஸ். பி. நாட்டிலிருந்து தப்பினார்

கொழும்பு, ஒக. 5

கொழும்பு பட்டலந்தப் பகுதியில் சித்திரவதை முகாம் ஒன்று நடத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரங்கள் குறித்து விசாரணை செய்து வரும் பட்டலந்த ஆணைக் குழுவின் முன்னர் குற்றம் சாட்டப்பட்டிருக்கும்சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் (எஸ். எஸ் பி.) டக்ளஸ் பீரிஸ் நாட்டிலிருந்து தப்பிச் சென்று விட்டதாகக் கூறப்படுகின்றது.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் சொந்தத் தொகுதியான பியகமவில் மேற்படி பட்டலந்தப் பகுதி உள்ளது.

கடந்த ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் அங்கு பெரிய சித்திரவதை முகாம் ஒன்று இயங்கி வந்ததாகவும் —

பொலீஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தோரும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தோரும் அரசியல் வாதிகளின் ஆதரவோடு அதனை நடத்தி வந்ததாகவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸுக்கு எதிராகப் பல்வேறு சாட்சியங்கள் வெளிவந்த வண்ணமிருந்தன.

டக்ளஸ் பீரிஸ் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தார். அவரது பாஸ்போர்ட்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

அப்படியிருக்க டக்ளஸ் பீரிஸ் எவ்வாறு நாட்டிலிருந்து தப்பிச் சென்றார் என்பது மர்மமாக இருப்பதாக விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

டக்ளஸ் பீரிஸ் தப்பிச் சென்றுள்ளார் என்ற செய்தியை ஊர்ஜிதம் செய்வதற்காக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்ட போது அவர் எதுவும் தெரிவிக்க மறுத்து விட்டார்என இலங்கை வானொலி அறிவித்தது. (உ-5)

## யாழ்ப்பாணப் பல்கலையுடன் இணையும்

கொழும்பு, ஒக. 5

வவுனியாவில் உள்ள வடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியை யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைத்துச் செயற்படுத்துமாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குக் கல்வி அமைச்சு பணித்துள்ளது.

டிப்ளோமா கல்வி நெறியை முடித்துக்கொண்ட மாணவர்களை பல்கலைக்கழக பட்டப் படிப்புக்குப் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கும்பல் பிடிபட்டது

சிங்கப்பூர், ஒக. 5

சிங்கப்பூர் போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகள் 14 பேர் கொண்ட போதைப் பொருள் கும்பல் ஒன்றைக் கைது செய்தனர். இவர்களிடம் 6 கிலோ போதைப் பொருளும் 16 ஆயிரம் சிங்கப்பூர் டொலர்களும் போதையூட்டும் குளிகைகளும் இருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது. விசாரணையில் இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படின் மரண தண்டனை விதிக்கப்படும் என சிங்கப்பூர் வானொலி தெரிவித்தது.

சிங்கப்பூர் சட்டப்படி போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படுவது வழமை என்பது தெரிந்ததே. (உ-10)

# வடக்கில் வாகனங்களுக்கு புதிதாக இலக்கங்கள்!

கொழும்பு, ஒக. 5

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்தில் ஈடுபட்டுவரும் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களுக்குப் புதிய இலக்கங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இது தொடர்பாக மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

பல்வேறு வகையான இலக்கங்களுடன் தற்போது யாழ்ப்பாணத்தில் சுமார் 4 ஆயிரம் வாகனங்கள் ஓடித் திரிவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை சர்வானந்தன்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை சர்வானந்தன் ஜேர்மனியில் 29-07-96 அன்று காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை — பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும், பவாநிதியின் (புன்னாலைக் கட்டுவன் வடக்கு) அன்புக் கணவரும், சாந்தசொரூபன் (சுவிஸ்), இரத்தினேஸ்வரன் (நோர்வே), கண்ணகி, முருகவேள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-

சு. சங்கரப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

சூராவத்தை,
சுன்னாகம்.

(C/2716)

## திருமதி சுந்தரம் சின்னப்பு

மல்லாகத்தை பிறப்பிடமாகவும், மயிலங்கூடல் இளவாலையை வதிவிடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கை தற்காலிக வதிவிடமாகவும கொண்ட திருமதி சுந்தரம் சின்னப்பு 02. 08. 96 அன்று காலமானார்.

அன்னார் கந்தர் சின்னப்புவின் (மிருகவைத்தியர்) அன்பு மனைவியும், திருமதி ச. வேலாயுதபிள்ளையின் சகோதரியும், சுசிலாதேவி கந்தையா (Stenographer - Colombo), சறோஜினி, புவனேந்திரராணி, தயாபரன் (Holland), சிவபரன் (Holland), தயாளினி, நளாயினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கதிர்காமர்- கந்தையா, பாலசுப்பிரமணியம், கணேசலிங்கம், கேதீஸ்வரி ஆகியோரின் மாமியாரும், சுரேந்திரன், பகீரதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03- 08- 96 சனிக்கிழமை நண்பகல் சங்கன்புலவு மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

திருமதி பா. சறோஜினி (மகள்)
செல்வி சி. தயாளினி
(மகள்)

சண்டிலிப்பாய் வடக்கு.

(42124)

## சூரியர் சிதம்பரப்பிள்ளை

துன்னாலை வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய பயணச்சீட்டுப் பரிசோதகர் (இலங்கை போக்குவரத்துச் சபை) சூரியர் சிதம்பரப்பிள்ளை 03- 08- 1996 (சனிக்கிழமை) அன்று சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலம் சென்ற சூரியர்- முத்துப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் செல்லம்மாவின் அன்புக்கணவரும் செல்வமோகன் (ஜேர்மனி), மதன்மோகன் (பொறுப்பதிகாரி, மதுவரித்திணைக்களம்—மன்னார்), மதிவதனி (ஆசிரியை, குடத்தனை அ. த. க. பாடசாலை), வசந்தகுமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரிமளத்தின் அன்புச் சகோதரரும், மகேந்திரசிங்கத்தின் (ஆசிரியர், கைதடி நவீல்ட் பாடசாலை) அன்பு மைத்துனரும், மாலினி, கோபிநாத் (ஆசிரியர், குடத்தனை அ. த. க. பாடசாலை), விக்கிரமசிங்கம், ரஞ்சிதமலர், தேவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிந்தன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-

கே. ஏ. எஸ். கோபிநாத்
(மருமகன்)

சங்கக்கடை ஒழுங்கை,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(42125)

## திருமதி இரத்தினம் பூரணம்

ஏழாலை வடக்கு முனியப்பர் கோயிலடி திருமதி இரத்தினம் பூரணம் 4 - 8 - 96 பகல் 10.55 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், தவமணி, சிவமணி (கொழும்பு), பரஞ்சோதிநாதன் (ஜேர்மனி), பேரின்பநாதன் (சவூதி), அருணகிரிநாதன் (கனடா), இரஞ்சினிதேவி, மோகனராணி சண்முகநாதன் (கனடா), இரவீந்திரநாதன் (கொழும்பு) ஆகியோரின் தாயாரும், செ. பாலசுப்பிரமணியம், க. துரைபத்மநாதன், மூ. தருமமூர்த்தி (கிளி), சி. அ. மூர்த்தி (கனடா), இந்திராதேவி, இரஞ்சிதமலர், சுசி, வவா, விஜி ஆகியோரின் மாமியாரும், ஜினா, சுகிர், சுதனி (ஆனைக்கோட்டை), பிரதீபா, சிந்துஜா, வினுப்பிரியா, துவாரகேசன் (ஆரியகுளம்), பிரதீபன், திவ்யா (கிளிநொச்சி), கலைச்செல்வன், (கனடா) கல்பனா (கனடா), கயபாவினி (கொழும்பு), அனுஜா, த. எழில்வேந்தன் (மாணவன், ஆண்டு 11— யூனியன் கல்லூரி), த தமிழ்வாணி (மாணவி யூனியன் கல்லூரி), அனுஜன், கௌசி, கௌசானி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (5-8-96) பகல் 1.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:

மூ. தருமமூர்த்தி (கிளி)
(மருமகன்)

இசிதோர் தேவாலயத்திற்கு அருகில்,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(42130)

# இந்தோனேஷியாப் பொலீஸார் எதிரணித் தலைவிக்கு அழைப்பாணை

## அங்கு அரசியல் நெருக்கடி முற்றுகின்றது

ஜகார்த்தா, ஒக. 5

இந்தோனேஷியாவின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களுள் ஒருவரும், ஜனநாயகக் கட்சியின் ஒரு பிரிவுத் தலைவருமான மெகவதி சுகர்ணபுத்திரியை விசாரணைக்காக ஜகார்த்தா பொலீஸ் தலைமையகத்துக்கு வருமாறு பொலீஸார் ஆணை அனுப்பியிருக்கின்றனர்.

ஜனநாயகக் கட்சி அலுவலகத்திலிருந்து கடந்த வாரம் சுகர்ணபுத்திரியை ஜாகர்த்தா பொலீஸார் பலவந்தமாக வெளியேற்றியதும்—

அதை அடுத்து அங்கு பெரும் கலவரங்கள் வெடித்ததும் தெரிந்தவையே.

இந்தோனேஷியாவில் தோன்றியுள்ள அரசியல் குழப்ப நிலைக்கு மத்தியில் சுகர்ணபுத்திரிக்கு ஆதரவாக அந்த நாட்டு மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சுகர்ணபுத்திரிக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டின் பொலீஸ் மா அதிபர் மேஜர் ஜெனரல் ஹமாமி நாத்நா தெரிவித்தார்.

இந்த அழைப்பாணை தொடர்பாக சில சட்டச்சிக்கல்கள் உள்ளன என்றும்—

அது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும்—

சுகர்ணபுத்திரியின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (உ-3)

# வடகொரியாவுக்கு மேலாக விமானம் பறக்க அனுமதி

டெல்அவில், ஒக. 5

உலக நாடுகளின் விமானங்கள் தனதுஆகாயப்பிரதேசத்தில் பறப்பதற்கு வடகொரியா அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமையதென்கொரியா விமானங்களும் வடகொரியா ஆகாயப் பிரதேசத்தின் ஊடாக பயணங்களை மேற்கொள்ள முடியும்.

16மாதங்களாக நடந்த பேச்சுக்களையடுத்து இந்த உடன்பாடு ஏற்பட்டதாக சர்வதேசபோக்குவரத்து நிறுவனம் தெரிவித்தது.

டிசம்பர் மாதத்தில் இருந்து இத்திட்டம் அமுலுக்கு வரும். (இ-3)

## வெற்றி

ஒலிம்பிக் உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆர்ஜென்ரீன அணியை 3 – 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து நைஜீரிய அணி தங்கப் பதக்கத்தை வென்றது.

இந்த வெற்றியை ஒட்டி நைஜீரியத் தலைநகரில் பெரும் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.

அரையிறுதியாட்டத்தில் பிரேசில் அணியை நைஜீரியா தோற்கடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆபிரிக்க நாடு ஒன்று சாம்பியனாகியிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

**உலக அரங்கில்**

# லெபனானிலிருந்து வாபஸ் பெற இஸ்ரேல் தயார்

## ஆனால் அதற்கு நிபந்தனை விதிப்பு

லெபனானில் இருந்து இஸ்ரேல் வாபஸ் பெறுவதற்குத் தயாராகவிருப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தானியாகோ அறிவித்துள்ளார்.

பலஸ்தீனக் கெரில்லாக்கள் ஆயுதங்களைக் களையவேண்டும் என்றும் —

இந்தப் பிரதேசத்தில் இஸ்ரேலின் நேச சக்திகளுக்கு எதிராக அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்றும் அவர் நிபந்தனை விதித்துள்ளார்.

இத்தகைய ஏற்பாட்டின் பேரில் லெபனானுடன் சமாதான உடன்பாடு ஒன்று ஏற்படுத்த முடியும் என்று அவர் இஸ்ரேலிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். (இ-3)

# அணுக்கதிர் வீச்சினால் சிறுவருக்கு இரத்தப்புற்று!

அணுக்கதிர் வீச்சின் தாக்கங்கள் நாசமானவை; பேரழிவைத் தரக்கூடியவை; உயிராபத்தை விளைவிப்பவை; நோய்களை உண்டாக்குபவை.

உக்ரேயின் நாட்டின் (அப்போது சோவியத் ஒன்றியத்துடன் இணைந்திருந்தது) செர்னோபிலில், 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஓர் அணு உலையில் கசிவு ஏற்பட்டது.

**தகவல் மேடை**

அதன் விளைவாக, உக்ரேயினிலிருந்து நீண்ட தூரத்தில் உள்ள கிரேக்க நாட்டுக் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அணு உலைக் கசிவு நடந்த போது தங்களது தாய்மார்களின் வயிற்றில் கருவாக இருந்த சிறுவர்களில் பெரும்பாலானோருக்கு இரத்தப்புற்று நோய் கண்டிருப்பது அறியப்பட்டுள்ளது.

ஏனைய சிறுவர்களை விட அணு உலைக் கசிவின் போது கருவில் இருந்த சிறுவர்களுக்கு இரத்தப்புற்று நோய் 2.6 மடங்கு அதிகமாக இருப்பதாக வைத்திய விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன.

செர்னோபில் அணு உலைக் கசிவின் போது உண்டான கதிர்வீச்சு, கிரேக்க நாட்டில் உணவுப் பொருள்களைத் தாக்கியது. அந்த உணவுப் பொருள்களை உண்ட தாய்மாரின் வயிற்றில் இருந்த கருக்களும் பாதிக்கப்பட்டன. அதன் விளைவே இன்றைய கிரேக்கச் சிறுவர்களைப் பாதித்துவரும் இரத்தப் புற்றுநோய் — என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

தனிநபர் நிகழ்ச்சி ஒன்றில்

# 44 ஆண்டுகளின் பின் இந்தியாவுக்கு ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம்

## டென்னிஸ் வீரர் லியண்டர் பேஸுக்குக் கிடைத்தது

அட்லாண்டா, ஒக 5

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் இறுதியாக இந்தியாவுக்கு ஓர் ஆறுதல் பரிசு கிடைத்திருக்கின்றது.

இந்திய டென்னிஸ் வீரர் லியண்டர் பேஸ் ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டதால் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற 65 நாடுகளின் வரிசையில் இறுதியாக இந்தியாவும் இடம் பிடித்துக் கொண்டது.

நேற்று நடைபெற்ற— ஆடவர் ஒற்றையர் — டென்னிஸ் ஆட்டத்தின் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பெர்னாண்டோ மிலகனியை தோல்வியுறச் செய்து லியண்டர் பேஸ் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

1952 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்ற கசவார் யாதேவ் மற்போரில் வெண்கலப் பதக்கத்தை பெற்றிருந்தார் அதற்குப் பின்னர் 44 ஆண்டுகள் கழித்து தனிநபர் நிகழ்ச்சியில் இந்தியாவுக்குக் கிடைத்த முதலாவது பதக்கம் இதுவாகும்.

இந்தியாவின் ஒலிம்பிக் சரித்திரத்தில் தனிநபர் நிகழ்ச்சியில் இரண்டாவது பதக்கத்தைப் பெற்றுத்தந்த அவருக்கு இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் பாராட்டுக்கள் கிடைக்கின்றன.

கல்கத்தாவைச் சேர்ந்த லியண்டர் பேஸுக்கு வயது 23.

1972 இல் ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள் பதக்கத்தைப் பெற்ற இந்திய ஹொக்கி அணியில் லியண்டர் பேஸின் தந்தையும் ஓர் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

லியண்டர் பேஸுக்கு இரண்டு லட்சம் ரூபா ரொக்கப்பரிசு வழங்கப்படும் என்று இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் தெரிவித்தார்.

லியண்டர் பேஸுக்கு ஐந்து லட்சம் ரூபா ரொக்கப் பரிசு வழங்கப்படும் என மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் எஸ். ஆர். பொம்மை அறிவித்தார். (உ-3)

## இந்தியா மீது குற்றச்சாட்டு

காட்மண்டு, ஒக. 5

நேபாள - இந்திய எல்லைப் பகுதியில் இந்தியா எல்லை அடையாளங்களை கள்ளத்தனமாக விரிவுபடுத்தி உள்ளது என நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

பல இடங்களில் எல்லை அடையாளக் கற்களைக் காணவில்லை என்றும் —

அவை இந்தியாவால் பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளன என்றும் — கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பொர்க்வால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பேசுகையில் குற்றம் சாட்டினார். (-3)

# கடற்படைக் கப்பல்கள் கச்சதீவு அருகே குவிப்பு!

மணிலா, ஒக. 5

கச்சதீவுக்கு அருகே ஸ்ரீலங்கா கடற்படையின் போர்க்கப்பல்களும், ரோந்துப் படகுகளும் குவிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்துள்ளது.

கச்சதீவுப் பகுதியில் தங்கள் நாட்டு கடற்படைக் கப்பல்களைத் தவிர ஏனைய கலங்கள் எதனைக் கண்டாலும் சுடுமாறு இலங்கைக் கடற்படைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக ''தினமணி'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

முல்லைத்தீவுக் கடற்பிரதேசத்திலும் இலங்கை கடற்படையினரின் 24 மணி நேர கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் ஏற்றிக்கொண்டு மத்திய கிழக்குத் துறைமுகம் ஒன்றிலிருந்து ''பாரிஸ்'' என்ற ஒரு கப்பல் இலங்கையை நோக்கி வந்துகொண்டிருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே (உ-3)

## தமிழக மீனவர் மீது கடற்படையினர் சூடு!

கடந்த வாரம்நாகைப்பட்டணம் வேதாரணியம் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களின் படகுகள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து படகுகளைச் சேதப்படுத்தியதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

வேதாரணியத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி, ஆண்டவன், ராஜேந்திரன், நடராஜன் ஆகிய மீனவர்கள் கோடிக்கரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு அவர்கள் இலக்கானதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## 16 கோடி டொலர் உதவி

கொழும்பு, ஒக. 5

சர்வதேச அபிவிருத்தி அமைப்பிடம் இருந்து இந்த வருடத்துக்கென இலங்கை 16 கோடி டொலரை நிதி உதவியாகப் பெற்றிருக்கிறது.

தெற்காசியாவுக்கு இந்தக் காலப்பகுதிக்கு வழங்கப்பட்ட தொகை 300 கோடி டொலராகும். (இ-3)

# ஒற்றையாட்சி நிலையை ஐ. தே. க. கைவிட வேண்டும்

## மட்டு. மாநகர சபையில் தீர்மானம்

கொழும்பு, ஒக. 5

இலங்கையில் ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி, மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கொண்ட சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்த வேண்டும்; ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை ஒற்றையாட்சி என்ற பிடிவாதப்போக்கைக் கைவிடவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் மட்டக்களப்பு மாநகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்தை ஐ தே. கட்சி மாநகர சபை உறுப்பினர்கள் எம். பத்மநாதன், அ. சக்கரவர்த்தி ஆகியோர் முறையே முன்மொழிந்து, வழிமொழிந்தனர்.

பிரேரணையை முன்மொழிந்த மாநகர சபை உறுப்பினர் எம். பத்மநாதன் பேசுகையில்—

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை ஒற்றையாட்சி முறையை மாற்ற முடியாது என்று கூறுவது தமிழ் மக்களை வேதனைப்படுத்துகிறது.

நான் அக் கட்சியில் அங்கத்தவராக இருந்த போதிலும் கட்சியின் இப் போக்கைக் கண்டிக்கிறேன் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் சகலரும் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும். நாட்டின் அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும்— என்றார். (அ-5)

## நியமனம்

கொழும்பு, ஒக. 5

மத்திய அரசின் கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக திரு இ. யோகநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த 18 வருடங்களுக்குப் பின்னர் கல்வி அமைச்சில் உயர் பதவிக்கு தமிழர் ஒருவர் இப்போதுதான் நியமனம் பெறுவதாக கூறப்பட்டது.

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக இவர் கடமையாற்றி வந்தார். (உ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்


### உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம்(வைற் கவுஸ் அருகில்)172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(41870)

### தட்டெழுத்து வகுப்பு

தட்டெழுத்து, சுருக்கெழுத்து (ஆங்கிலம், தமிழ்) வகுபபுக்கள் மீண்டும் நடைபெறுகின்றன. தொடர்பு:- ஆசிரியை, தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

(41768)

### சகல பாடசாலைகளுக்கும்

ஆண்டு 1 முதல் ஆண்டு 13 வரையிலான சகல வகுப்புக்களுக்குமான மாணவர் தேர்ச்சி அறிக்கைகள் (REPORTS) எம்மிடம் அச்சிட்டு பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- ஏ. ஆர். எஸ். பிறிண்டேர்ஸ், புகையிரத நிலையவீதி, (நகரசபை அருகில்) சாவகச்சேரி

(42110)

### விற்பனைக்கு

செவ்வரத்தை, குரோட்டன் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பிளான்ட் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(42107)

### புலமைப் பரிசில் 96

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடபபடுகின்றன. அடுத்த (11 வது) வெளியீடு: 04 – 08 – 96. BOND, INSTITUTES 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(42093)

### தேவை

நீரிறைக்கும் இயந்திரம் தேவை. விலை, தயாரிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்க. திரு. கு. சி. பிள்ளை, வரோதயன் சோதிட ஆய்வகம், திருவீதி, உரும்பராய் வடக்கு, உரும்பராய். (42128)


## சுன்னாகத்தில் திருமுறைச் சுவடி ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஒக. 5

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சுன்னாகத்தில் திருமுறைச் சுவடி ஊர்வலம் நடைபெற்றது.

சுன்னாகம் மயிலணி முருகமூர்த்தி ஆலயத்தில் திருமுறைப் பூசை விழா திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் போற்றித் திருத்தாண்டகப் பதிகம், போற்றித் திருஅகவல், திருவாசகம் ஆகியவை பாடி திருமுறைப் பூசையை ஆலய குருக்கள் நடத்தினார்.

ஏழாலை பண்டிதர் மு. கந்தையா, மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் ஆகியோர் உரையாற்றியபின் திருமுறை சுவடி ஊர்வலம் நடைபெற்றது. (இ-3)


## நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

**O/L DAY CLASS**

ஆரம்பம்:— **05 – 08 – 96**

திங்கள் காலை 8 மணி

நிர்வாகி

(C/2693)

## 18 ஆவது பிறந்த தின வாழ்த்து

இருபாலையைச் சேர்ந்த
செல்லத்துரை ராஜேஸ்வரி தம்பதிகளின்
மூன்றாவது புதல்வி

★ செல்வி சிவாஜினி ★

தனது 18 ஆவது பிறந்த நாளை இன்று **05-08-96** திங்கட்கிழமை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கை அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

(42120) அப்பா

## காணவில்லை

கணேஷ் சிவலிங்கம் (குமார்)
வயது 21

என்பவர் **31 – 07 – 96** அன்று ஊரெழு மேற்கிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டார். அன்றிலிருந்து அவரைக் காணவில்லை. அவ்வேளை சறுப்பு செக்சேட், வெள்ளை செக்சாரம் ஆகியவை அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு அறிவிக்கவும்.

தகவல்:
மனைவி

ஊரெழு மேற்கு,
பொக்கணை வீதி,
சுன்னாகம்.

(42129)

## அறிவித்தல்

### குகன் ஸ்ருடியோ ஸ்தாபனம்

பொது மக்கள் வசதி கருதி 2ஆம் குறுக்குத் தெருவில் பருத்தித்துறை தபால் கந்தோருக்கு கிழக்கு முகமாக போகும் றோட்டில் 31-7-96 இல் இடம் மாறியுள்ளது.

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

(24104)

## நன்றியுரை

''என்னை நீ அதிகமதிகமாக மகிமைப் படுத்தும் போதெல்லாம் உனக்கு நான் அதிகமதிகமாக ஆசிகள் அருளுவேன்'' என்ற குழந்தை யேசுவே!

உமது தெய்வீக கரங்களை நீட்டி எல்லா வேதனைகளையும், தளர்ச்சியையும் நீக்கி விட்டீர்! புகழும் மகிமையும் உரியதாக.

(42127) அடியாள்

## மரங்கள் தறிப்பதற்குத் தடை

தென்மராட்சிப் பகுதியில் இதுவரை காலமும் பெரும் தொகை மரங்கள் அனுமதியின்றித் தறிக்கப் பட்டுள்ளன. இந்நிலை தொடருமானால் எம் மண்ணின் வளமும், மக்களின் வாழ்வும் பெருமளவு பாதிப்புக்குள்ளாக நேரிடும். எனவே, தயவுசெய்து எனது அனுமதியின்றி எந்தவித மரத்தையும் தறிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதுடன் அத்து மீறித் தறிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரியத்தருகின்றேன்.

பு. சுந்தரம்பிள்ளை
பிரதேச செயலர்/
தென்மராட்சி, சாவகச்சேரி.

(சி-2712)


### முற்றத்தில் பிணமாகக் கிடந்தனர்

# தந்தையும் இளம் மகளும் நள்ளிரவு வெட்டிக்கொலை!

## சாவகச்சேரியில் பயங்கரம்

தென்மராட்சி, ஒக. 5

வீட்டுக்குள் படுத்திருந்த தந்தையும், மகளும் வெளியே இழுத்து வரப்பட்டு வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி கெருடாவிலில் இடம் பெற்றுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த கதிரித்தம்பி கார்த்திகேசு (வயது 65), என்பவரும், அவரது மகளான 24 வயது யுவதியுமே கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் வீட்டு முற்றத்தில் சடலமாக காணப்பட்டனர்.

உயிரிழந்த இளம் பெண்ணின் சடலத்தில் காயங்கள் தென்படுவதால் அவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மரணமான இருவரும் மட்டுமே வீட்டில் இருந்தனர் என அறியவருகிறது.

இரவு 9.00 மணியளவில் தகப்பனும் மகளும் ''ஐயோ! ஐயோ!!'' எனக் கூக்குரல் இட்டதாகவும் —

அந்த நேரத்தில் எவரும் உதவிக்கு செல்லவில்லை எனவும் —

நேற்றுக்காலை சென்று பார்த்தபோது தந்தையும் மகளும் இரத்த வெள்ளத்தில் சடலங்களாக காணப்பட்டதாகவும் —

சம்பவம் நடந்த இடத்திற்கு அண்மித்த வீடுகளில் வசிப்போர் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தென்மராட்சிப் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது (உ-117)

# களனிப் பாலமருகே தமிழர் ரூபா 2 லட்சத்துடன் கைது!

கொழும்பு புதிய களனிப் பாலத்தருகே வீதித் தடைச் சோதனை மேற்கொண்டிருந்த கிராண்ட்பாஸ் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞன் ஒருவரைக் கடந்த முதலாம் திகதி கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

இந்த இளைஞர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்றும்—

இவர் கைது செய்யப்படும் சமயம் அவரிடம் இரண்டு லட்சம் ரூபா இருந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பீடி இலை வாங்குவதற்காக தனது மாமனார் இந்தப் பணத்தை தம்மிடம் தந்ததாகப் பொலீஸாரிடம் அந்த இளைஞன் தெரிவித்துள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# கெயர்நிறுவன அலுவலகம் மீண்டும் யாழ்ப்பாணத்தில்

வடமராட்சி, ஒக. 3

சர்வதேச கெயர் நிறுவனத்தின் யாழ் பிரிவு மீண்டும் யாழ்ப்பாணத்திலுள்ள தனது முன்னைய இடத்துக்கு விரைவில் இடம் மாறவுள்ளது.

தற்போது பருத்தித்துறையில் இயங்கி வரும் இந்நிறுவனம் யாழ்ப்பாணத்துக்கு இடம் மாற்றப்பட்டதும் பருத்தித்துறையில் அதன் உப அலுவலகம் ஒன்று இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் முன்னர் கெயர் நிறுவனம் இயங்கி வந்த இடத்தில் யாழ். செயலகம் இயங்கி வருவதாகவும்—

அதனைப் பழைய இடத்துக்கு விரைவில் மாற்றியதும், கெயர் நிறுவனத்துக்குரிய இடத்தை மீளத் தருவதாக யாழ். அரச அதிபர் கெயர் நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டது. (உ-173)


## பிரத்தியேக வகுப்புக்கள்

**A/L 97, 98**

கணக்கியல் Mr. MOORTHY
வணிகப்புள்ளிவிவரவியல் Mr. THAVASEKAR

வகுப்புக்கள் நடை பெறுகின்றன
168, **TEMPLE ROAD, NALLUR.**
(கந்தன் கருணைக்கு முன்பாக)

(42129)

## அறிவித்தல்

★ யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சொந்தமான K.K.S வீதியிலுள்ள கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட உள்ளன. பெற்றுக்கொள்ள விரும்புவோர்கள் தேவஸ்தானத்துடன் **10.8.96**-க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

★ தேவஸ்தானத்துக்குரிய கடைகள், வீடுகள், காணிகளில் உள்ள வாடகையாளர்கள் தங்கள் வாடகைப் பணத்தை இம்மாத இறுதிக்குள் செலுத்தி உரிய பற்றுச்சிட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

★ ஆலயக் குருக்கள், பரிசாரகர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் **20-08-96** ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

வை. கந்தப்பசெட்டியார்
தர்மகர்த்தா.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்,
யாழ்ப்பாணம்.

(சி/2713)

உதயன்

## குடியியல் உணர்வு

பொதுச் சொத்தைச் சூறையாடுவதும் மோசடி செய்வதும் எமது மக்களின் உயிரி (Genes) யில் கலந்த ஒன்றாகி விட்டதா?

அல்லது கால வர்த்தமானத்தின் மாற்றத்துக்கு இப்படி ஒரு குணாம்சம் தேவை என்று அதனைப் புதிய தமிழர் சந்ததி வரித்துக் கொண்டு விட்டதா?

இத்தகைய ஒரு கேவலமான, அருவருக்கத்தக்க குணவியல்பு தமிழர்களின் இரத்தத்தில் ஊறிவிட்டால், நாம் பண்டைப் பெருமைகள் பேசி என்ன பயன்? நாகரிகம் அடைந்த இனம் என்று கூறுவதற்கு எங்களுக்கு என்ன தகுதி உண்டு?

பொதுச் சொத்து என்றால் அது மக்கள் நலனுக்காக மக்களின் பணத்தைக் கொண்டு ஆக்கப்படுவது என்பதனை எம்மவரில் பலரும் மறந்து விடுகிறார்கள். பொதுச் சொத்து என்பதனால் அது குறித்து எவரும் கேட்க முடியாது; எவரும் நினைத்தது போல எப்படியும் செய்யலாம் என்று எண்ணுகிறார்கள்.

பொதுச் சொத்தில் எனக்கும் பங்குண்டு தானே, மற்றவர்கள் அபகரிப்பதற்கு முன்னர் நாம் கொள்ளையிட்டு விடுவோம் என்று போட்டி போடுபவர்களே பலர்.

தமிழ்ப் பகுதிகள் நீண்ட காலமாக அபிவிருத்தித்துறையில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களில் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கேனும் ஆரம்பிக்கப்பட்டதில்லை.

இங்குள்ள அரச நிறுவனங்களின் வளங்கள் மெத்தவும் நலிவுற்று விட்டன. அத்தகைய பின்னணியில் வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்களின் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது தான் மட்டுவில், கல்வயல், நுணாவில் தண்ணீர் தாங்கித் திட்டங்கள்.

யாழ்ப்பாண மாநகரசபை, சாவகச்சேரி நகரசபை, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இத் தண்ணீர்த்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இப்போதைய சூழ்நிலையில் அதனைத் தொடர்ந்து நிறைவேற்ற முடியவில்லை என்பதால், அத்திட்டம் அரைகுறையாக நின்று விட்டது அதனைப் பூர்த்தி செய்தால் தென்மராட்சி மக்கள் எதிர் நோக்கும் தண்ணீர்ப் பிரச்சினையை ஓரளவேனும் தீர்க்கலாம்.

ஆனால் தண்ணீர்த் தாங்கி மேடையைப் பிரித்து மண் எடுக்கும் நாசவேலை தொடங்கப்பட்டுவிட்டதாகச் செய்திகள் வந்துள்ளன.

குடாநாட்டு மக்களின் குடியியல் உணர்வு (Civic Sense) எந்தளவு மோசமாகக் கரைந்து விட்டது என்பதற்கு இதனை விட வேறு உதாரணம் எதுவும் தேவை தானா...?

இந்த ஆரம்பம் தான் அடுத்தவன் சொத்தில் கூசாமல் கை வைப்பதற்கும், அதனைத் தனது உடைமையாக்கும் ''கெட்டித்தனத்துக்கும்'' வித்தாகிறது. இடம்பெயர்ந்து திரும்பி வந்த பின்னர் சொந்தக்காரர்கள் இல்லாத வீடுகளில் அடுத்தவர்கள் புரியும் நாட்டாண்மை சர்வசாதாரணமாகிவிட்டது. வெட்கம்!

ஒற்றையாட்சியைக் கைவிடுவதா? இல்லையா?

# தெரிவுக்குழுவின் முக்கிய கூட்டம் வியாழக்கிழமை

அதிகாரப் பகிர்வுத் திட்டம் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு எதிர் வரும் வியாழக்கிழமையன்று கொழும்பில் கூடும்போது அதிகாரப் பகிர்வு பற்றிய முக்கிய விடயங்கள் குறித்து அங்கு விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் வியாழக்கிழமை நடைபெறும் கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெறும் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

அதிகாரப் பகிர்வு பற்றிய அடிப்படை அம்சங்கள் நாட்டின் அரசமைப்பின் 2, 4, 76 ஆவது பிரிவுகளில் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் இரண்டாவது சரத்து ''ஒற்றை ஆட்சி'' பற்றியும் —

நான்காவது சரத்து 'நாட்டு மக்களின் இறைமை' பற்றியும் —

76 ஆவது சரத்து ''சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்தைத் தவிர வேறு எந்தச் சபைகளுக்கும் கிடையாது'' என்பது பற்றியும் கூறுகின்றன.

மேற்படி மூன்று சரத்துக்களிலும் பொதுவான திருத்தங்களைக் கொண்டு வருவதோடு இரண்டாவது, நான்காவது சரத்துக்களைத் தொடர்புபடுத்தும் வகையில் ''நிதிச் சரத்து'' ஒன்றை சட்ட நகல் வரைபாகச் சமர்ப்பிக்க வேண்டும் என கடந்த தடவை தெரிவுக்குழு கூடியபோது முடிவு எடுக்கப் பட்டது.

அதனடிப்படையில் ''நிதிச் சரத்து'' என்ற சட்டவரைபு சட்டமா அதிபரினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சியின் கீழ் பிராந்திய சபைகளுக்கு எவ்வகையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்பதே இந்த அடிப்படைச் சரத்துக்களின் நோக்கமாக இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது.

தென்னாபிரிக்காவில், ஒற்றையாட்சியின் கீழ் பிராந்திய சபைகளின் ஒன்றியம் மிகவும் திருப்திகரமாகச் செயற்பட்டு வருகின்றது என்றும்—

அதனை இலங்கையிலும் செயற்படுத்தமுடியுமா என ஆராய வேண்டும் என்றும்—

அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவுக்குழுவிடம் ஆலோசனை கூறியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் எதிர் வரும் எட்டாம் திகதி தெரிவுக்குழு கூடும் போது விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வரப்படும் எந்தவொரு அதிகாரப் பகிர்வுத் திட்டமும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்காது என்று தமிழ்க் கட்சிகள் ஏற்கனவே அறிவித்துள்ளன.

இதேபோல, ஒற்றையாட்சியின் கீழ் தீர்வுகாணும் வகையில் ஐ. தே. கட்சியின் எம். பியான கே. என். சொக்ஸி சமர்ப்பித்த ஆலோசனையையும் தமிழ்க் கட்சிகள் நிராகரித்துள்ளன.

இந்த நிலையில் வியாழன்று நடைபெறும் தெரிவுக்குழுக் கூட்டம் காரசாரமாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(உ)

## நெடுந்தீவுப் பகுதிக் கடலில் தத்தளித்த பயணிகள் படகு

நெடுந்தீவில் இருந்து நயினாதீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் படகு ஒன்று, கடல் நீர் உட்புகுந்ததால் நடுக்கடலில் தத்தளித்தது.

எனினும் அதில் பயணம் செய்த அறுபத்தேழு பயணிகளும் மற்றொரு படகின் உதவியுடன் கரை சேர்க்கப் பட்டனர்.

படகில் கூடுதல் எண்ணிக்கையான பயணிகள் ஏற்றப் பட்டதாலும், காற்றும், கடல் கொந்தளிப்பும் இருந்ததாலுமே, படகு தத்தளிக்க நேர்ந்ததாகக் கூறப்பட்டது.

உதவிக்கு வந்த படகு, தத்தளித்த படகை நெடுந்தீவுக்கு இழுத்துச் சென்றுவிட்ட பின்னர் —

அங்கு 25 பயணிகளை இறக்கிய பின்னர் 32 பேருடன் தத்தளித்த படகு மீண்டும் பயணத்தை ஆரம்பித்தது. கடந்த 26ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.

(அ-111)

## மிதி வெடியில் சிக்குண்டு ஏழாலையில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 5

மிதிவெடியில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்தார்.

ஏழாலை தெற்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில், அவ்விடத்தைச் சேர்ந்த சின்னத்துரை அமிர்தலிங்கம் (வயது 59) என்பவரே மரணமானவராவார்.

உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று திரும்பிய வேளையே அந்த வளவில் இருந்த மிதிவெடியில் இவர் சிக்குண்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

மிதிவெடி வெடித்ததும் வலது கால் துண்டிக்கப்பட்ட நிலையில், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைக்குட்படுத்திய வேளையே அவர் அங்கு மரணமானார்.

அதிக இரத்தப்பெருக்கினாலேயே உயிரிழக்க நேரிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15)

## சமய நிகழ்வுகளில்

தென்மராட்சி ஓக. 5

சாவகச்சேரி துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இம் மகோற்சவம் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இம் மாதம் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (அ-117)

★ ★ ★

மீசாலை காட்டுவளவு நெல்லியடி முருகன் தேவஸ்தான மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஓகஸ்ட் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் ஆடிஅமாவாசைத் தினமான ஓகஸ்ட் 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(உ-117)

ஆடி அமாவாசை விரதம்:

## போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் சுற்றிவளைப்பை தவிர்க்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 5

ஆடி அமாவாசை தினமான எதிர் வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், அதற்கு முதல் நாள் 12 ஆம் திகதியும் —

மக்களின் போக்குவரத்துக்கு எதுவித கட்டுப்பாடு விதிக்காதிருக்கவும்—

இந்த இரண்டு தினங்களிலும் சுற்றி வளைப்பு போன்றவற்றைத் தவிர்க்கவும் —

பாதுகாப்புப் படையினருடன் பேசி ஏற்ற ஒழுங்குகளைச் செய்து —

யாழ். மாவட்ட இந்துக்கள் தமது சமய அனுட்டானங்களைத் தடையின்றி நிறைவேற்றுவதற்கு உதவுமாறு—

யாழ். அரச அதிபரிடம் கேட்கப்பட்டுள்ளது

வில்லூன்றி புனித தீர்த்தப் பரிபாலனசபையின் செயலாளர் பேராசிரியர் இ. குமாரவடிவேல், அரச அதிபருக்கு இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஆடி அமாவாசை இந்துக்களுக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்த விரததினம்.

சில ஆண்டுகளுக்கு முன் வரை ஆடி அமாவாசை தினம் இலங்கைத் தேசிய விடுமுறை தினங்களுள் ஒன்றாக இருந்து வந்தது. தேசிய விடுமுறை தினங்கள் பட்டியல் சில ஆண்டுகளுக்கு முன் மறுபரிசீலனை செய்யப்பட்டபோது, ஆடி அமாவாசைத் தினம் தேசிய விடுமுறை தினப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. எனினும் யாழ். குடாநாட்டில் இத்தினம் ஒரு ''அவ்விடத்திற்குரிய''(Local) விடுமுறை நாளாகக் கைக் கொள்ளப்பட்டு வந்தது.

ஆடி அமாவாசை தினத்தன்று இந்துக்கள் கீரிமலை; வில்லூன்றி, திருவடி நிலை போன்ற கடலோடு சேர்ந்தமைந்த புண்ணிய நீர்நிலைகளிலும், கடலிலும் நீராடி அவ்விடங்களில் தமது முன்னோர்களை நினைவு கூரும் கிரியைகளை மேற்கொள்வதுடன் விரதமிருந்து ஆலயங்களுக்குச் சென்று விசேட வழிபாடாற்றுவர். ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறும்.

மக்களின் சமய சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய தொன்று. ஆகவே இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட யாழ் மாவட்ட மக்கள் ஆடி அமாவாசை விரதத்தை எதுவித தடங்கலுமின்றி அனுஷ்டிக்கக்கூடியதாக வசதிகளைச் செய்து உதவவும்.

ஆடி அமாவாசைத் தினம் (13-08-1996) 'அவ்விடத்திற்குரிய' (Local) விடுமுறை தினமாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டும். அன்றைய வேலையிழப்பைச் சரி செய்ய அடுத்துவரும் சனிக்கிழமை (17-08-1996)வேலை நாள் ஆக்கப்படலாம்.

★ தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் போக்குவரத்துக்கட்டுப்பாடுகள் (உதாரணமாகத் தட்டாதெருச்சந்தி, கலட்டிச்சந்தி போன்ற இடங்களினூடாகச் செல்வது கட்டுப்படுத்தப்படுவது) ஆடி அமாவாசை வரை தொடருமாயின் —

★ குடாநாட்டின் பெரும் பகுதி மக்கள் வில்லூன்றி போன்ற புனித தீர்த்தங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

★ மக்கள் தாம் விரும்பும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வது தடைப்படும்.

★ ஆடி அமாவாசை விசேட கிரியைகளைச் செய்து வைக்கவும், விசேட நிகழ்வுகளில் பங்குபற்றவும் செல்ல வேண்டிய குருமார்கள் அவ்வாறு செல்ல முடியாத நிலை ஏற்படும்.

★ வழிபாட்டிடங்களில் சேவை புரியும் திருமாலை தொடுப்போர் மங்கல வாத்தியம் (தவில், நாதஸ்வரம்) இசைப்போர் போன்றவர்கள் வழிபாட்டிடங்களுக்குச்செல்ல முடியாத நிலை ஏற்படும்.

★ இதனால் வழிபாட்டு இடங்களில் நடைபெறும் வழிபாடுகள் பாதிப்புக்குள்ளாகும்.

அவ்வாறு நிகழாதிருக்க பாதுகாப்புப் படையினருடன் பேசி ஏற்ற ஒழுங்குகள் செய்யப் பட வேண்டும் — என்று கேட்கப்பட்டுள்ளது.

(அ)

## கெயர் பிரதிநிதி வருகை

வடமராட்சி, ஓக. 5

யாழ். மாவட்டத்தில் சர்வதேச கெயர் நிறுவனம் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென கெயர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர் நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

கனடா நாட்டைச் சேர்ந்தவரான திரு. கெயர் ஜெல்சிட் என்பவரே இங்கு வந்து சேரவுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருந்து கெயர் நிறுவனம் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறித்து ஆராய்ந்து முடிவு எடுப்பார் என கெயர் நிறுவன யாழ். மாவட்டதிட்ட அதிகாரி திரு. அருள்ஞானம் தெரிவித்தார்.

(உ-173)

## மூவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஓக. 5

பொலன்னறுவை மாவட்டத்தில் வயல் வெளிக்குச் சென்று கொண்டிருந்த மூன்று பொது மக்கள் இனம் தெரியாத குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# வவுனியாவில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச ஊழியருக்கு முற்பணம்

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் வவுனியாவில் தங்கியுள்ள அரச ஊழியர்கள் வவுனியாவில் கையொப்பம் இடுவதற்கு அனுமதி வழங்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்காக வவுனியா வந்துள்ள இந்த அரச ஊழியர்கள் அங்கு செல்வதற்கான பயண ஏற்பாடுகளை எதிர்பார்த்து வவுனியாவில் காத்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு இவர்கள் செல்ல பயண ஏற்பாடு செய்யப்படும் வரை வவுனியாவில் இவர்கள் கையொப்பம் இட அனுமதிக்குமாறு அரச அதிபர் கோரியுள்ளார்.

இந்த அரச ஊழியர்களுக்கு 6 ஆயிரம் ரூபாவை முற்பணமாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்—

வவுனியாவுக்கு நேற்று முன்தினம் வருகை தந்த மீள் குடியமர்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவருடன் இது குறித்து தாம் பேசியுள்ளதாகவும்—

அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (உ-3)

# உயர் பதவிகளில் உள்ளவரையும் கண்டிக்கும் உரிமை பத்திரிகைக்கு

## முந்திய நிலை மாறிவிட்டது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 5

முன்னைய ஆட்சிக் காலத்தில் ஜனநாயக உரிமைகள் இன்றி மக்கள் அடக்கப்பட்டனர். இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

அரசாங்கத்தின் மிக உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களைக்கூட பத்திரிகையாளர்கள் அச்சமின்றிக் கண்டிக்கக்கூடிய, விமர்சிக்கக்கூடிய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

—இவ்வாறு கூறினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அத்தனகல தொகுதியைச் சேர்ந்த வடுகொடப்பிட்டிய என்ற இடத்தில் அரசாங்க வைத்திய சாலையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் 63 வீதமான வாக்காளர்கள் எனக்கு அதிகாரம் அளித்துள்ளார்கள்.

சீர்குலைந்துள்ள நிலையிலிருந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருட காலத்தில் மக்களின் சிந்தனைகளிலும் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் மக்கள் ஜனநாயக சுதந்திரங்கள் இன்றி அடக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள்.

அக்காலத்தில் பத்திரிகையாளர்களால் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை. அரசையோ அரசுடன் தொடர்புடையவர்களையோ விமர்சிக்க அனுமதி வழங்கப்படவில்லை. அப்படி விமர்சிப்பவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

ஆனால், இப்போது நிலைமை மாறியுள்ளது. பத்திரிகையாளர்கள் அச்சமின்றி செயற்பட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் மிக உயர்ந்த பதவியில் இருப்பவர்களைக் கூட எவரும் கண்டிக்க முடியும்.

ஆனால், இவ்வாறான பத்திரிகைச் சுதந்திரத்தை சில பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் துஷ்பிரயோகம் செய்து வருவது வருத்தத்திற்குரியது.

இன்று தனிநபர்களும் சில பத்திரிகை அமைப்புகளும் தத்தமது அரசியல் நோக்கங்களுக்காக தவறான தகவல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

யுத்தம் பற்றிய செய்திகள் கூட திரிபு படுத்தப்படுகின்றன. இவ்வாறு பொய்ச் செய்திகளை வெளியிடுவதால் நாட்டிற்காகப் போராடி வரும் படையினரின் மனோ நிலை கூட பாதிப்புறுகின்றது.

இத்தகைய பத்திரிகைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

நாம் ஒரு பயங்கர யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம். நீண்ட பல ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுதுதான் அரசாங்கம் இந்த யுத்தத்தைச் சரியான வழியில் நடத்திச் செல்கின்றது.

ஆயுதப் படையினர் தமது உயிரைத் துச்சமென மதித்து நாட்டுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது, மக்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் படுகுழிக்குள் தள்ளப்பட்டிருந்த தேசிய பொருளாதார நிலையை மீட்பதற்காக தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் — என்று ஜனாதிபதி கூறினார். (உ-3)

### இன்று முதல்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

னவே உள்ள அகதிகளுடன் மேலதிகமாக கிளிநொச்சியில் இருந்து 250 குடும்பங்கள் அங்கு வந்து சேர்ந்துள்ளன.

அவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். மேலும் 460 குடும்பங்கள் உறவினர், நண்பர்கள் வீட்டில் தங்கியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்கும், வவுனியாவில் இராணுவத்தால் விடுவிக்கப்படாத பிரிவுகளுக்கும் மக்கள் வந்துகொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன-

இவர்களின் நிலையைக் கவனிக்க இரு அதிகாரிகள் அங்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்துக்கு வந்துள்ளவர்களின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கு நிவாரணம் வழங்க அத்தியாவசிய ஆணையாளரிடம் அனுமதி பெற்றுள்ளோன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நகரை அண்டிய பிரதேசங்களில் இருந்து தெற்கு நோக்கி மக்கள் வருவதாகவும் —

முறிகண்டி தெற்கு, மாங்குளம், மல்லாவி ஆகிய பிரதேசங்களில் அவர்கள் தங்கியுள்ளதாகவும் —

உடையார்கட்டு, புதுக்குடியிருப்புப் பகுதிகளுக்கும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் ஒரே இடத்தில் நிற்காமல் இன்னமும் நகர்ந்துகொண்டிருப்பதால் இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது — என்று தெரிவித்தார். (உ-3)

### எங்கே போவது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள்,

குடிதண்ணீர்த்தட்டுப்பாடு, உணவுத்தட்டுப்பாடு ஆகிய இரண்டும் இடம்பெயர்வோருக்குப் பெரும் பிரச்சினைகளாக இருக்கப்போகின்றன.

வழமையாகவே இந்த மாதங்களில் இங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு வருவதுண்டு இப்போது முன்னரை விட மூன்று மடங்கு மக்கள் உள்ளனர். கிணறுகள் வற்றிவிட்டன. இன்னும் இரண்டு மாதங்களில் நிலைமை மிக மோசமடையும்.

குடி தண்ணீர் சிறிதளவும் இல்லாத பகுதிகளுக்குத் தூர இடங்க ல் இருந்து தண்ணீர் எடுத்துச் சென்று வழங்க ஏற்பாடு செய்கிறோம். 5 அல்லது 6 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தே தண்ணீர் கொண்டு வரவேண்டி உள்ளது.

மக்கள் இடம்பெயர்வின் போது நகரும் வேளை குடிப்பதற்குத் தண்ணீர் இன்றித் தவிப்பதைக் காணமுடிந்தது.

உணவு நிலைமையும் மோசமாகவே உள்ளது கடந்த 18 ஆம் திகதியில் இருந்து உணவு வாகன அணி இங்கு வராமையால் ப. நோ. கூ. சங்கங்கள் வெறுமையாக உள்ளன.

இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு பணத்துக்குக் கூட உணவுப் பொருள்களை வழங்க முடியாத நிலையில் உள்ளோம்.

வவுனியாவில் இருந்து உணவுப் பொருள் வந்ததும் அவற்றை வழங்க ஒழுங்கு செய்வோம். (அ-3)

### கிளிநொச்சியுடன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவதாக பி.பி.ஸி. தமிழ்ச் சேவை குறிப்பிட்டது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப்பகுதிக்குள் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் திட்டம் குறித்து நீண்ட காலமாகவே பேசப்பட்டு வந்தது.

ஆனால், முல்லைத்தீவில் அரசுக்கு ஏற்பட்ட பாரிய இராணுவ இழப்பை அடுத்து, இத்திட்டம் முன்னுக்குக் கொண்டு வரப்பட்டது போல் தெரிகின்றது என பி.பி.ஸி தமிழ்ச்சேவை மேலும் தெரிவித்தது. (உ-3)

### கொழும்பை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னருக்கு வான் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்தன. (அ-3)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 05-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தீர்வுத்திட்டம் குறித்து பிரமுகர்களின் கருத்து

இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டம் ஒன்றை அரசு வெளியிட்டு நேற்று முன்தினத்துடன் ஒரு வருடம் பூர்த்தியாகியது. அதனை ஒட்டி தீர்வுத் திட்டம் குறித்து பல்வேறு அரசியல் பிரமுகர்கள் தெரிவித்த கருத்தை பி. பி. ஸி. சிங்கள சேவை ஒலிபரப்பியது. அதன் சுருக்கம் வருமாறு:-

## குமார் பொன்னம்பலம்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் குமார் பொன்னம்பலம் கூறியதாவது:-

'இந்த அரசியல் தீர்வுத் திட்டம் வேறு நோக்கத்துடனேயே முன்வைக்கப்பட்டுள்ளது.'

''ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய தேவை அரசுக்கு இருந்தது. ஏனைய நாடுகளால் கைவிடப்பட்ட ஆயுதங்களைப் பெறவேண்டிய தேவையும் அரசுக்கு இருந்தது. இக்காரணங்களினால் தான் அரசியல் தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைத்துள்ளது என்பது எனது தெளிவான முடிவாகும்.''

''இலங்கையைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களை ஓர் இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவர்களுக்குத் தங்களைத் தாங்களே ஆளும் உரிமை வழங்கப்பட வேண்டும்; தமிழ் மக்களின் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும்; தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதப்படாது அனைவருடனும் சமமாக நடத்தப்பட வேண்டும், இவை அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியற் சட்டத்தில் புகுத்தப்பட வேண்டும். அத்தகைய தீர்வையே ஏற்றுக் கொள்ள முடியும்.

## வாசுதேவ நாணயக்கார

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார கூறியதாவது:-

''இந்தத் திட்டம் குறித்து திருப்தியடைகிறேன். சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக இவ்வாறான ஒரு திட்டத்தை உருவாக்கியமையும் அது தொடர்பாக அரசின் அணுகு முறையும் திருப்தியளிக்கிறது. ஆனால் இந்தத் தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஐ. தே. கட்சியின் ஆதரவைப் பெறவேண்டியுள்ளதே, அதுதான் கவலைக்குரியது.''

## விக்கிரமபாகு கருணரத்ன

நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்தின கூறியதாவது:—

''வரைபு வடிவத்தில் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டத்தில் எவரும் கைச்சாத்திடவில்லை. விரும்பிய விதத்திற்கு திசை திருப்பக்கூடிய விதத்தில் அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களின் வடக்கு கிழக்கு இணைந்த பிராந்தியத்திற்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என ஆரம்பத்திலேயே தெரிவித்திருந்தேன். ஆனால் இந்தவரைபு வெளிவந்த போது முற்றிலும் மாறான கருத்தைக் கொண்டதாகவே வெளிவந்தது''

## தினேஷ் குணவர்த்தனா

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறியவை:—

''அரசு இத்தீர்வுத்திட்டத்தை முன்வைத்த வேளையில் மேற்கொள்ளப்பட்ட ஆர்வம், ஊக்கம் கைவிடப்பட்டுவிட்டது. குறிப்பாக இறைமைக்குப் பங்கம் ஏற்படாது என்று அரசு தெரிவித்தபோதிலும் இறைமை பாதிக்கப்படும்; நாடாளுமன்றம் தனது அந்தஸ்தை இழக்கும் என மக்கள் அறிந்துள்ளதால் மக்களின் எதிர்ப்பு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. ஒரு வருடம் முடிவடைந்தும் அரசால் இவ்விடயத்தில் ஓர் அடிகூட முன்னேற முடியவில்லை. மேலும் இத்திட்டம் தொடர்பாக அரசுக்குள்ளேயே பிணக்குகள் உள்ளன.''

## சரத் அமுனுகம

ஐ.தே.கவைச் சேர்ந்த சரத் அமுனுகம கூறியவை:-

''ஐ.தே. கட்சி மூன்று விடயங்களை அரசுக்குத் தெரிவித்துள்ளது நாட்டின் இறைமை சிதறடிக்கப்படுவதை ஐ தே. க. பார்த்துக்கொண்டிராது; இரண்டாவதாக இத்திட்டத்தில் வடக்கு கிழக்கு இணைவது அல்லது பிரிவது தொடர்பாக தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை; மூன்றாவதாக இத்தீர்வுத் திட்டம் பிரச்சினைக்கு இறுதியான தீர்வாக அமையுமா என்பது பற்றி மீண்டும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.''

### காவலில் இருந்த

# இளைஞன் கொலை; பொலீஸாருக்குச் சிறை!

## பாலஸ்தீனத்தில் சம்பவம்

பாலஸ்தீனத்தின் கரையோர நகரான நாபுல்ஸில் பொலீசாரால் கைது செய்யப்பட்ட பாலஸ்தீன இளைஞன் ஒருவன் பாலஸ்தீனப் பொலீஸாரின் சித்திரவதையால் உயிரிழந்ததாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பாக மூன்று பொலீஸ் அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மொகமட் ஜமேயில் என்ற இந்த இளைஞன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சமயம் மேற்கொள்ளப்பட்ட தாகக் கூறப்படும் சித்திரவதைகள் காரணமாக கடந்த புதன்கிழமை இஸ்ரேலிய வைத்திய சாலையில் இறந்ததும் —

அதனை அடுத்து அங்கு ஆர்ப்பாட்டங்கள் நடந்ததும் தெரிந்தவையே.

இது குறித்து பலஸ்தீன இராணுவ நீதிமன்றம் விசாரணை நடத்தி மூன்று பொலீஸ் அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனை விதித்தது.

மேற்படி கொலைச் சம்பவத்தை அடுத்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், பலஸ்தீன தேசிய ஆட்சி முறைக்கு எதிரான மக்கள் எழுச்சியின் ஆரம்பம் என அந்த ஆட்சி முறையைக் கடுமையாக எதிர்த்து வரும் ஹமாஸ் இயக்கம் அறிவித்திருக்கின்றது. (உ-3)